UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)
ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19 - 4 Oct - Dec 2025
Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தொல்காப்பியரின் பாவியல் கோட்பாடுகள்

**முனைவர் மா. பாலசெல்வி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி
பாளையங்கோட்டை

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் செய்யுளியல் பகுதியில் செய்யுள் உறுப்புகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வுறுப்புகள் செய்யுள் எனும் இலக்கிய உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பா எனும் செய்யுளின் கோட்பாடுகள் பற்றிய தொல்காப்பியரின் சிந்தனையை வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**முன்னுரை**

தமிழ்மொழியின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் ஒரு பேரிலக்கணப் பெருநூல் ஆகும். தொல்காப்பியர் மிகச் சிறந்த இலக்கண ஆசிரியர் மட்டுமின்றி ஒரு பாவியல் பேராசானாகவும் திகழ்ந்துள்ளார் என்பதைத் தொல்காப்பியம் தெளிவாகவும் துல்லியமாகவும் காட்டுகின்றது. தொல்காப்பியரின் தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமையும் இலக்கியம் படைப்பதற்கு அல்லது இலக்கியத்தைத் துய்ப்பதற்குரிய தமிழ் மரபுகளைத் தன்னகத்தே கொண்டதாகத் திகழ்கின்றது. எந்தவொரு இலக்கியத்தையும் செய்யுள் என்று வழங்குவது தொல்காப்பியர் காலத்து மரபாகும். அவ்வகையில் ஒரு செய்யுளைக் கட்;டமைப்பதற்குத் தொல்காப்பியரால் முன்மொழியப்படும் பாவியல் கோட்பாடுகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**பாவியல்- விளக்கம்**

பா, இயல் என்ற இரு சொற்களை இணைத்துப் பாவியல் என்ற சொல்லானது உருவாக்கப்படுகிறது. ஓரெழுத்து ஒரு மொழியான 'பா' எனும் சொல்லுக்குப் பாட்டு, செய்யுள் ஓசை, யாப்பு போன்ற பல்வேறு பொருள் தரப்படுகின்றன. இது போன்றே இயல் எனும் சொல்லுக்கு இசை, இலக்கணம், விதி போன்ற விளக்கங்கள் தரப்படுகின்றன. பா, இயல் எனும் இவ்விரு சொற்களுக்கு அகராதிகள் பின்வருமாறு விளக்கங்களைத் தருகின்றன. 'பா' என்ற ஓரெழுத்து மொழிக்கான சொல் விளக்கத்தையும் பொருள் விளக்கத்தையும் பின்ருமாறு காணலாம்.

**பா- பொருள் விளக்கம்**

"பா என்பதன் வாய்மொழி, செவிப்புலத்தளம் அதாவது சிலரால் அல்லது பலரால் கேட்கப்படுவதற்காக ஒருவராற் பாடப்படுவது" (செ.ஜீன் லாரன்ஸ், கு.பகவதி ப.ஆ., தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் ப.78.) என்று பா என்பதற்கு விளக்கம் தருகிறார் கார்த்திக்கேசு சிவத்தம்பி.

**பா- சொல் விளக்கம்**

பா எனும் சொல்லிற்கு, "அழகு, ஓரெழுத்து, கிழங்குப்பா, நிழல், நெசவுபா, பஞ்சிநூல், பரப்பு, பரவுதல், பாட்டு, பாவென்னேவல், பிரபா, வெண்பா முதலியவைந்து பா" (சந்தியா நடராஜன்,

பதி.ஆ., மதுரைத் தமிழ் அகராதி பக்.166-167) என்று விளக்கம் தருகிறது மதுரைத் தமிழ்ப்பேரகராதி.

“பாட்டு, பரப்பு, பாவு, கைம்மரம், காப்பு, தூய்மை” (டி.எஸ். இராமலிங்கம், ப.ஆ., நர்மதாவின் தமிழ் அகராதி, ப.610.) என்று நர்மதாவின் தமிழ் அகராதி கூறுகிறது. இவ்விளக்கங்களின் வழி ‘பா’ என்பதற்கு ஒருவரால் படைக்கப்படும் பாட்டு என்று பொருள் கொள்ளலாம்.

**இயல் விளக்கம்**

இயல் எனும் சொல்லிற்கு “ ஒன்று நடந்து வரும் முறை அல்லது ஒன்றன் இயல்பு என்பதைக் குறிப்பிடும் விகுதி” (இராமகிருஷ்ணன், ப.ஆ. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.101.) என்று விளக்கம் தருகிறது கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி “ஆகமம், இயல், இயலென்னேவல், தெரிநிலை, வினைப்பகுதி, இயற்கை, இயற்றமிழ் இலக்கணம், ஒழுக்கம், ஒழுங்கு. ஒத்து, குணம், கூறுபாடு, சாயல், தமிழ், தன்மை, நடை, நூற்பகுதி, பொருந்துதல், விதி, இயல்பு, ஒப்பு, மென்மை, உழுவலன்பு, செலவு, மாறுபாடு, இசை, விதி, நட, கூடியதாயிரு, பொருத்து” என்பன போன்ற விளக்கங்களைத் தருகிறது கழகத் தமிழ் அகராதி. (கழகத் தமிழ் அகராதி, ப.112.) இவ்விளக்கங்களிலிருந்து ‘இயல்’ என்பதற்கு ஒன்றை உருவாக்குவதற்கான இலக்கணம் என்று பொருள் தரலாம்.

**கோட்பாடு விளக்கம்**

“கொள்கை, நடத்தை, கொண்டிருக்கும் தன்மை” கழகத் தமிழ் அகராதி, ப.406.என்கிறது கழகத் தமிழ்அகராதி. கோட்பாடுகள் என்பதனை, “குறிப்பிட்ட ஓர் இலக்கிய கொள்கை காரணமாக இலக்கியத்தின் உருவிலும், பொருளிலும் ஏற்படும் அமைவு நெறி அல்லது ஒரே சார்பான அமைவு நெறிகளின் தொகுதி” (கா.சிவத்தம்பி, இலக்கியமும் கருத்து நிலையும், ப.15.) என்று விளக்குகிறார் கா.சிவத்தம்பி. இவ்விளக்கங்களின் அடிப்படையில் ‘கோட்பாடு’ எனபதற்கு ஒரு பொருள் பற்றிய பொதுவான கொள்கை என்று பொருள் கொள்ளலாம்.

பா, இயல் என்ற சொற்களுக்கு அகராதிகள் கூறிய விளக்கங்களின் அடிப்படையில் பாவியல் என்ற சொல்லுக்கான பொருள் அமைக்கப் படுகிறது. இக்கட்டுரையில் ‘பா’ எனும் சொல்லானது ‘பாட்டு’ அல்லது ‘செய்யுள்’ என்ற பொருளிலும், இயல் எனும் சொல்லானது இலக்கணம் என்ற பொருளிலும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதன் அடிப்படையில் பாவியல் என்பது ‘பாட்டின்இலக்கணம’ அல்லது ‘செய்யுளின் இலக்கணம்’ என்ற பொருளிலும் எடுத்தாளப்படுகிறது. இதிலிருந்து ஒரு பாட்டு அல்லது செய்யுளை ஆக்குவதற்கு அடிப்படை யான இலக்கணங்களை உள்ளடக்கிய நெறிமுறை களைப் ‘பாவியல் கோட்பாடுகள்’ எனும் தலைப் பானது தம்முன் பொதிந்து வைத்திருக்கிறது எனும் முடிவுக்கு வரலாம். எனவே ஒரு பாட்டு அல்லது செய்யுளை இயற்றுவதற்கு வகுத்துரை க்கப்படும் இலக்கண நெறிகள்; பாவியல் கோட்பாடுகள் எனப்படுகின்றன.

**தொல்காப்பியரின் பாவியல் கோட்பாடுகள்**

தொல்காப்பியம் அதன் இன்றுள்ள வடிவத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகார ங்களாக வகுக்கப்பட்டுள்ளன. 1600 நூற்பாக்களை உடையது எனினும் உரையாசிரியருக்கேற்ப நூற்பாக்களின் எண்ணிக்கை வேறுபடுகிறது. நூற்பாக்களின் வரிகள் 1-59 வரை நீள்கின்றன. தொல்காப்பியம் செய்யுள் அமைப்புக்குத் தேவையான அனைத்து விதிகளையும் பேசுகிறது. பொருளதிகாரம் சங்க இலக்கியப் பொருள், யாப்பு, அணி, மரபு போன்றவை பொருளதி காரத்துள் கூறப்படுகின்றன. எனவே சங்க இலக்கியம் தொல்காப்பியம் வழி நின்றே நோக்கப்படுகின்றது.

“தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பெரும் பிரிவு களைக் கொண்டது மூன்றாவது பிரவு முதுலிரண்டைக் காடடிலும் விரிவானது. எழுத்து, சொல், பொருள் என இப்பிரிவுகட்கு அளிக்கப் பட்டுள்ள தலைப்புகள் எழுத்து அல்லது நெடுங்கணக்கு, அவ்வெழுத்துக்களால் அமைக்கப் பெற்ற சொற்களும் தொடர்களும் அவை தரும் பொருள்கள் என நேர் பொருள் தருவன. இதனால் முதலிரண்டு பிரிவுகளும் மூன்றாவது பிரிவான பொருளதிகாரத்த்திற்குத் துணையாகவும் ஆதரவாகவும் எழுதப்பட்டது என்பது உறுதிப் படுகிறது. முதலிரண்டு பிரிவுகளை நாம் மொழி ஆராய்ச்சி செய்வன எனக் கொண்டால் பண்டைய செய்யுள் மரபுகளைத் தொகுத்தளிப்பது பொருளதிகாரம் எனக்கருதலாம்” (தமிழண்ணல், சங்கமரபு, ப.67.) என்று தமிழண்ணல் கூறுவது தொல்காப்பியத்தின் சிறப்பைப் புலப்படுத்துகிறது.

இதிலிருந்து எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களில் முதல் இரண்டு அதிகாரங்கள் தமிழ் மொழியின் இலக்கணத் தையும் பொருளதிகாரம் அன்றைய தமிழ் இலக்கியங்களின் பாவியல் பண்புகளையும் ஆய்வு செய்து நிற்பன என்று கூறினால் அது மிகையாகாது. ஒரு மொழியின் இலக்கணத்

தையும் அதே மொழி இலக்கியத்தின் பாவியலை யும் ஒரு சேர, ஒரே தலைப்பின் கீழ், ஒரே நூலில் கூறி நிற்கும் நூல் தொல்காப்பியம் எனக் கூறலாம். தொல்காப்பியத்தை இலக்கண நூலாக மட்டுமே பலர் பார்க்கின்றனர். தொல்காப்பியம் ஒரு பாவியல் நூல் என்ற எண்ணம் பலருக்குத் தோன்றுவதில்லை. பழைய தமிழ் இலக்கியத்தின் பாடுபாருள் செய்யுள் ஆக்கம், செய்யுள் வகை போன்றவற்றை விளக்கும் ஒரு நூல் தொல் காப்பியம் என்று எண்ணுவதில்லை. மாறாக இது வாழ்வியல் நூல். பண்டைக்கால மக்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் நூல் என்ற எண்ணமே பலரிடம் காணப்படுகின்றது. இந்த எண்ணமானது மாற்றப்பட வேண்டும்.

யாப்பு என்பது வெறும் செய்யுள் என்ற எண்ணம் மறைந்து ஒருங்கிணைந்த கவிதையாக்கம் என்ற எண்ணம் தோன்ற வேண்டும். இத்தகைய எண்ணம் தோன்றும்; போதுதான் தொல்காப்பிய த்தின் கோட்பாடுகளும், கொள்கைகளும் நன்கு தெரிய வரும். செய்யுளில் மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, தொடை போன்றவை மட்டுமின்றிக் செய்யுளில் பாடுபொருள் உண்டு. கற்பனை உண்டு. கனிந்த மனித வளம் உண்டு என்று உணர்ந்தால்தான் செய்யுளின்; பாவிய லைப் புரிந்துக்கொள்ள முடியும். தொல்காப்பிய த்தையும் இவ்வாறு அணுகினால் தொல்காப்பியம் 'ஒரு பாவியல் நூல் என்ற உண்மை புலனாகும். இவ்வுண்மையைத் தொல்காப்பியச் செய்யுளி யலின் முதல் நூற்பா நமக்குப் புலப்படுத்தும். இந்நூற்பா பண்டைத் தமிழிலக்கியம் ஆக்கப் படுகின்ற முறைகளைத் தொகுத்துக் கூறுகின்றது என்று சொல்லலாம்.

"செய்யுளியலின் முதலாவது சூத்திரம் இக்காலத் தமிழ்க் கவிதை பற்றிய ஒரு சுருக்கமான களஞ்சியத் தொகுதியாகும். பாடலுக்கு முதற் காரணமாக இருக்கின்ற எழுத்தொலி தொடக்கம் அப்பாடலின் நிறைவிற் காணப்படும் வனப்புகள் வழி தமிழ் செய்யுளின் உருவாக்கம் அதிலே பேசப்படுகின்றது." (கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழின் கவிதையியல், ப.25.) என்கிறார் கார்த்திகேசு சிவத்தம்பி.

"தொல்காப்பியரது இந்தச் சூத்திரம் தொல்காப்பியச் சூத்திரங்களிலேயே மிக மிக முக்கியமான சூத்திரம். பொருளதிகாரம் இதனை மையமாக வைத்து ஆக்கபட்டது. (பொற்கோ 1994:135).இது முற்றிலும் சரியானதே. ஆனால் இது பொருளதிகாரத்திற்கு மட்டும் உரியதன்று. எழுத்து, சொல் ஆகியவற்றிற்கும் இது நுழைவாயிலாக அடிப்படையாக அமைந்துள்ளது. தொல்காப்பியரது நூல் முழுமைக்கும் இதுதான் நுழைவாயில். எழுத்தும் சொல்லும் வழக்குக்கும் செய்யுளுக்கும் உரிய மொழி பறறிப்பேசுவது இங்கு நினைவு கூர்தற்குரியது. மட்டுமின்றி வழக்கிலிருந்து வேறுபட்டுச் செய்யுளில் மட்டுமே காணப்படும் மொழிப் பண்புகளைப் பற்றியும் அவை பேசுகின்றன." (ஜீன்லாறன்ஸ், தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், ப.14.) என்கிறார் அகத்தியலிங்கம். இதிலிருந்து செய்யுளியலில் கூறப்பட்ட முதல் நூற்பாவானது ஒரு செய்யுளை இயற்றுவதற்கான இலக்கணக் கூறுகளைத் தனக்குள் பொதிந்து வைத்திருக் கிறது. என்பதை அறிய முடிகிறது. தொல்காப்பியர் செய்யுளியலில் ஒரு செய்யுளை அமைப்பதற்கான இலக்கணத்தை வரிசைப் படுத்துகிறார்.

**மாத்திரை யெழுத்திய லசைவகை எனாஅ**

**யாத்த சீரே யாடியாப் பெனாஅ**

**மரபே தூக்கே தொடைவகை எனாஅ**

**நோக்கே பாவே அளவியல் எனாஅ**

**திணையே கைகோள் பொருள்வகை எனாஅ**

**.......** (தொல்.பொருள்.செய்யுள்.நூ.எ.310)

எனும் நூற்பாவின் மூலம் அறியலாம். தொல்காப்பியர் உறுப்புகளைத் தொகுத்துக் கூறும்போது, இரண்டு வகையாகக் கூறுகின்றார். அவற்றில் முதல் வகைக்கு 'யாப்பியல் வகை' என்று தொல்காப்பியரே பெயர் வைத்துள்ளார். அடுத்த வகைக்கு 'வனப்பு' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளுக்கு தரும் இலக்கணங்களை பின் வரும் பகுதியில் காணலாம்

### மாத்திரை

மாத்திரை என்பது எழுத்துகளின் ஒலியளவாகக் கொள்ளப்படுகிறது. கண் இமைத்தலும் நொடித்தலுமாகிய இரண்டும் மாத்திரையின் அளபு என்பது நுண்மையாக இலக்கணத்தை உணர்ந்தோர் கண்ட நெறியாகத் (தொல். பொருள். செய்யுள்.நூ.எ.7) தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். குற்றெழுத்து ஒரு மாத்திரை, நெட்டெழுத்து இரண்டு மாத்திரை, குற்றியலுகரமும், குற்றிலிகரமும், ஆய்தமும், மெய்யெழுத்தும் அரை மாத்திரை, மகரக் குறுக்கம் கால் மாத்திரை. உயிர்மெய்யின் மாத்திரை என்பது அதில் இருக்கும் உயிரெழுத்தின் மாத்திரையைப் பொறுத்தது. இவ்வாறு எழுத்துகளின் மாத்திரையானது வரையறுக்கப்படுகிறது. இவற்றிலிருந்து மாத்திரை என்பது எழுத்துகளின் உச்சரிப்பைக் குறிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

### எழுத்து

எழுத்து என்பது ஒரு மொழிக்கு வேர் போன்றது.

இது எழுத்தொலியையும், வரி வடிவத்தையும் குறிக்கிறது. எழுத்து குறித்த தொல்காப்பிய எண்ணங்களை அதன் எழுத்ததிகாரத்திலிருந்து பெற முடிகிறது. 'எழுத்து என்பது ஒலியை மட்டுமே குறிப்பதாகச் சிலர் கருகின்றனர். எழுத்து எனும் சொல் ஒலியெழுத்தினையும், வடிவெழுத்தினையும் குறிக்கிறது' என்பது நச்சினார்க்கினியர் கருத்து. எழுத்து என்பதற்கு, "ஒரு மொழியின் சொற்களுக்கு அடிப்படையான உறுப்பின் ஒலி வடிவத்தினைக் குறிக்கும் வரி வடிவக் குறியீடு" (ஜெயதேவன், தொல்காப்பிய அகராதி, ப.67.) என்று விளக்கம் தருகிறது தொல்காப்பிய அகராதி. இதிலிருந்து எழுத்து என்பது வடிவத்தையும் ஒலியையும் குறிக்கும் என்ற முடிவுக்கு வரலாம்.

**எழுத்தின் வகைகள்**

பிற்கால இலக்கண நூல்கள் எழுத்துகளை முதலெழுத்து, சார்பெழுத்து எனப் பாகுபாடு செய்தனர். ஆனால் தொல்காப்பியம் அத்தகைய பாகுபாட்டைக் கொள்ளவில்லை. தொல்காப்பியர் உயிர், மெய், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் (தொல்.பொருள்.செய்யுள்.நூ.எ.1) என்று எழுத்தின் வகையைக் குறிப்பிட்டுள்ளார். உயிரெழுத்துகளை குறில், நெடில் என்றும், மெய்யெழுத்துகளை வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் பாகுபடுத்தியுள்ளார். பிற்கால இலக்கண நூலாகிய நன்னூல் கூறும் சார்பெழுத்துகளுள் உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகியவற்றைத் தொல்காப்பியர் பேசியுள்ளார். ஆனால் இவற்றைத் தொல்காப்பியம் சார்பெழுத்துகளாகக் குறிப்பிடவில்லை. இகர, உகரங்களின் குறுக்கமே குற்றிலிகரமும் குற்றியலுகரமும் ஆகும் என்பதைப் பெரும் பாலான ஆய்வாரள்கள் ஏற்றுக் கொண்டு ள்ளனர். அதாவது ஒரு மாத்திரை ஒலிக்க வேண்டிய உகரம் அரை மாத்திரை குறைந்து ஒலித்தால் அது குற்றியலுகரமாகும். இதேபோன்று ஒரு மாத்திரை அளவில் ஒலிக்க வேண்டிய இகரம் அரை மாத்திரையாகக் குறைந்து ஒலித்தால் அது குற்றியலிகரமாகும்.

'ஆய்தம்' என்று தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய சொல் பிற்காலத்தில் அஃகேனம், தனிநிலை, புள்ளி, ஒற்று என வேறு பெயர்களையும் பெற்றது. தொல்காப்பியர் கூறிய முப்பாற்புள்ளி என்ற தொடர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றினையும் குறிப்பதாகவும் ஆய்தம் ஒன்றையே குறிக்கும் எனவும் இருவேறு கருத்துகள் நிலவின.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் முப்பாற் புள்ளி என்பது ஆய்தத்தைக் குறிப்பதாகக் கொண்டனர். எனவே இவர்கள் கருத்துப்படி ஆய்தம் மூன்று புள்ளி வடிவினையுடையது என்பது புலனாகிறது. பேராசிரியர் முப்பாற்புள்ளி என்ற தொடரானது குற்றியலுகரம், குற்றியலி கரம், ஆய்தம் ஆகிய மூன்றையும் குறிப்பதாகக் கொண்டார்.

**அசை**

எழுத்தை அடுத்து தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்பு அசையாகும். அசை என்பது எழுத்துகளின் கூறுபாடு ஆகும். இஃது இயலசை, உரியசை என இரண்டாகப் பகுத்துக் கூறப்படும். குறிலும் நெடிலும் தனித்தும் குறிலிரண்டு இணைந்தும், குறில் பின்னர் நெடில் இணைந்தும், அவை ஒற்றெடுத்தும் வந்தால் அதற்கு நேரசை, நிரையசை (தொல். பொருள்.செய்யுள்.நூ.எ.312) என்ற பெயர்கள் வழங்கப்பெறும். நேர்பு, நிரைபு அசைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது நேர், நிரை என்னும் இரண்டசைகளும் குற்றியலுகரம், முற்றியலுகரம் என்பவனவற்றுள் ஒன்றை இறுதியில் பெற்று, பிளவுபடாது ஒரு சொல்தன்மை எய்திவரின், அவை முறையே நேர்பு, நிரைபு என்னும் இருவகை அசைகளாகும். தனிக் குற்றெழு த்தாகிய நேரசையின் பின் இங்ஙனம் இருவகை உகரமும் வந்து நேர்பு அசையாதல் இல்லை. நேர், நிரை என்னும் இரண்டும் இயலசை எனவும், நேர்பு, நிரைபு என்னும் இரண்டும் உரியசை எனவும் பெயர்பெறும்.

**சீர்**

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அசைகளால் அமைவது சீர் என்னும் உறுப்பாகும். அடிக்கு உறுப்பாக வருவது சீர் ஆகும். சீர் என்ற சொல்லுக்குச் சிறப்பு, புகழ், உயர்வு, அழகு, ஓசை, தாளம் போன்ற பல்வேறு பொருள்கள் இருந்தாலும் செய்யுளைப் பொறுத்தவரை அது மொழியோடு அதாவது பொருள் உணர்த்தும் சொல்லோடு தொடர்புடையது ஆகிறது. அசை களின் அடிப்படையில் உருவாகும் சீர்கள் பற்றி தொல்காப்பியர் செய்யுளியலில் விரிகவாகப் பேசியுள்ளார். இயலசை எனப்பட்ட நேரும் நிரையும் தம்முள் ஒத்தும் மாறியும் வரும். உரியசை எனப்பட்ட நேர்பும் நிரைபும் தம்முள் ஒத்தும் மாறியும் வரும் (தொல்.பொருள். செய்யுள். நூ.எ.321) என்கிறார் தொல்காப்பியர். மேலும் உரியசைகளான நேர்பு, நிரைபு அசைகளுடன் இயலசைகளான நேரும், நிரையும் கலந்து வரும் என்கிறார். அதேபோன்று இயலசையுடன் உரியசைகளும் சேர்ந்து வரும். இயலசைகள் மயங்கி வந்தால் அது இயற்

சீராகவும் உரியசைகள் மயங்கி வந்தால் அது ஆசிரிய உரிச்சீராகவும் கருதப்படும்.

* நேர் நேர், நேர்நிரை, நிரைநிரை, நிரை நேர்- இயற்சீர்
* நேர்பு நேர்பு, நேர்பு நிரைபு, நிரைபு நிரைபு, நிரைபுநேர்பு- ஆசிரிய உரிச்சீர்
* உரியசைகளான நேர்பு, நிரைபு அசைகளுடன் நிரை அசையானது சேர்ந்தால் அதுவும் ஆசிரிய உரிச்சீராகக் கருதப்படும்.
* நேர்பு நிரை, நிரைபு நிரை- ஆசிரிய உரிச்சீர்
* உரியசைகளுடன் நேர் அசையானது சேர்ந்தால் அது இயற்சீராகக் கருதப்படும்
* நேர்பு நேர், நிரைபு நேர்- இயற்சீர்
* இயலசைகளுடன் நேர்பு, நிரைபு அசைகள் தனித்தனியாகச் சேரும்போது அதுவும் இயற்சீராகக் கருதப்படும்.
* நேர் நேர்பு, நேர் நிரைபு, நிரை நேர்பு, நிரை நிரைபு- இயற்சீர்

இவற்றிலிருந்து தொல்காப்பியத்தில் மொத்தம் 16 வகையான இயற்சீர்கள் கூறப்படுகின்றன என்பது தெளிவாகிறது. இயலசைகளுடன் உரியசைகளும் உரியசைகளுடன் நேர் அசையும் சேரும்போது உருவாகும் ஆறு வகையான இயற்சீர்களும் சிறப்பில்லாத இயற்சீர் எனக் குறிக்கப்படுகின்றன. இயலசைகள் மயங்கி உருவாகும் இயற்சீர் நான்குடன் இறுதியில் நேரசை வந்தால் அது வெண்பா உரிச்சீராகும்.

நேர்நேர்நேர், நேர்நிரைநேர், நிரைநிரைநேர், நிரைநேர்நேர்- வெண்பா உரிச்சீர்

இவை தவிர ஏனைய இயற்சீர்களுடனும் ஆசிரிய உரிச்சீர்களுடனும் நேர், நிரை அசைகள் தனித்தனியாக இணையும்போது உருவாகும் சீர்கள் வஞ்சிச்சீர் அல்லது வஞ்சியுரிச்சீர்கள் எனப்படுகின்றன. 60 வகையான வஞ்சியுரிச் சீர்களைக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர்.

நேர், நிரை, நேர்பு, நிரைபு ஆகிய அசைகளும் ஓரசைச்சீர்களாக வரும் இவற்றிலிருந்து தொல்காப்பியர் ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச் சீர் என்று மூவகைச் சீர்களைக் குறிப்பிடு கின்றார். இதிலிருந்து அசைகளை அடிப்படை யாகக் கொண்டே சீர்கள் அமைக்கப் படுகின்றன என்பது புலனாகிறது.

### அடி

சீர் இரண்டும் பலவும் தொடர்ந்து வருவது அடி என்னும் உறுப்பாகும் அடியென்று சிறப்பித்துச் தெசால்லப்படுவது நாற்சீரடியே (தொல்.பொருள். செய்யுள்.நூ.எ.340) என்பது தொல்காப்பியரின் கொள்கை. இரண்டு சீராலும் மூன்று சீராலும் ஐந்து சீராலும் ஆறு சீராலும் வரும் அடிகள் பலவுள்ளன என்றாலும் அவை அத்துணைச் சிறப்புடையதாகக் கருதப்பட மாட்டாது என்பது தொல்காப்பியரின் கருத்து. அந்நாற்சீரடி இரண்டும் பலவும் தொடர்ந்து வருவதே பாட்டாகும். அடியானது சிறப்பாக அமையும் போது பாட்டும் சிறப்பாகக் கருதப்படும். இத்தகைய சிறப்பு வாய்ந்த அடியானது குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என வகைப்படுத்தப்படுகின்றது. அதாவது ஒரு அடியில் இடம்பெறும் உயிர் மற்றும் உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கையைக் கொண்டே அடிகளுக்குப் பெயர்கள் இடப்படுகின்றன. குறளடியில் 4 முதல் 6வரையிலான எழுத்துகள் வரும். 7,8,9 எழுத்துகள் வந்தால் அது சிந்தடியாகும். 10,11,12,13,14 எழுத்துகள் வந்தால் அது அளவடியாகும். நேடிலடி என்பது 15,16,17 எழுத்துகள் கொண்டது. கழிநெடிலடியில் 18,19,20 எழுத்துகள் இடம்பெறும். இவ்வாறு அடிகளில் எழுத்துகளை எண்ணும்போது குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், மெய்யெழுத்து ஆகியவை எண்ணப்படாது விடப்படுகின்றன. குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என எழுத்து எண்ணி அமைக்கப்பட்ட இவ்வைந்து அடிகளையும் விரிக்கும்போது அவை 625 ஆக விரியும். மேலும் இவ்வடிகளை விரிக்கும்போது அவை வரம்பு கடந்து போகும் என்பதும் தொல்காப்பியரின் விதியாகும். இதிலிருந்து தொல்காப்பியத்தில் அடி என்பது எழுத்துகளின் எண்ணிக்கைக்கேற்ப அவற்றின் ஒலிகளின் அளவுக்கேற்ப அமைவதாகக் கூறப்பட்டுள்ளதை அறியலாம்.

### யாப்பு

யாப்பு என்ற சொல் பல பொருள் பயப்பினும் யாத்தல், கட்டுதல் என்ற வேரினின்று தோன்றியது ஆகும். தொல்காப்பியர் யாப்பு என்ற சொல்லைச் செய்யுளியலிலேயே பொதுப் பொருளிலும் சிறப்புப் பொருளிலும் கையாண்டுள்ளார். யாப்பு என்பதைப் பொதுப் பொருளாகக் கொள்ளும்போது ஏழு வகையான யாப்பு (செய்யுள் வகைகள்) வகைகளைக் கூறுகின்றார் தொல்காப்பியர். (தொல்.பொருள். செய்யுள்.நூ.எ.384) பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் ஆகிய ஏழும் தமிழர்களின் அடிப்படை யாப்பு வகைகளாக அதாவது செய்யுள் வகைகளாக வழக்கில் இருந்துள்ளன என்பது புலனாகிறது.

இவற்றுள் பாட்டு அடிவரையறையுடைய இலக்கிய வகையாகும். மற்ற அனைத்தும் அடி

வரையறையில்லாத இலக்கிய வகையாகும். உரை என்பது பாடல்களின் அடிகளுக்கடையே காணப்படும் உரைப்பகுதி, பாட்டு அல்லாது தனிப்பட்ட நிகழும் உரையாடல், அடிப்படை உண்மையில்லாத கற்பனைக் கதைகள், உண்மையோடு பொருந்திய நகைச்சுவைக் கதைகள் என நான்கு வகையாகப் பிரிக்கப்படுகிறது;.

நூல் என்பது இலக்கண நூல்களைக் குறிப்பதாகும். இது சூத்திரம், ஓத்து, படலம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமையும் பிசி என்பது விடுகதை இலக்கியத்தைக் குறிக்கும். முதுசொல் என்பது பழமொழியைக் குறிக்கும். வாய்மொழி என்பது அறிவுடையோர் கூறும் மெய்ம்மொழிகளைக் குறிக்கும். அங்கதம் என்பது பேச்சிடையேயும் பாட்டிடையேயும் வரும் குறிப்பு மொழிகளைக் குறிப்பதாகும்.

இவ்வாறு ஏழு வகையான யாப்பு (செய்யுள்) வகைகளைக் கூறிய தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளாகக் கூறிய முப்பத்து நான்கினுள் யாப்பையும் ஓர் உறுப்பாகக் கூறியுள்ளார். இவ்விடத்தில் யாப்பு என்பதைச் சிறப்புப் பொருளில் கையாண்டுள்ளார். அதாவது இவ்வெழுவகை யாப்புகளும் யாக்கப்படும் அல்லது செய்யப்படும் முறைகளைக் குறிக்க யாப்பு என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். எழுத்து, அசை,சீர், அடி எனத் தொடர்புற்றுச் செற்ந்து நிற்கும் ஓர் அடிக்குள் படைப்பாளி தான் கருதிய பொருளை முற்ற முடிய அதில் அமையுமாறு செய்தல் என்பது யாப்பு எனும் உறுப்பாகும். இதிலிருந்து செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகக் கூறப்படும் யாப்பு என்பது ஏழு வகையான யாப்பு(செய்யுள்) வகைகள் செய்யப்படும் அல்லது யாக்கப்படும் முறையைக் குறித்து நிற்கிறது எனலாம்.

### மரபு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான நடைமுறை மரபு எனப்படும். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று நால்வகைச் சொற்களையும் யாப்பு, வழியாகச் செய்யுட்கண் நாட்டப்பெறும் நெறிமுறைகள் மரபு எனப்படும(தொல்.பொருள்.செய்யுள்.நூ.எ.385).
சுருக்கமாக மரபு என்பதைச் சொற்களைக் கையாளும் முறை எனலாம்.

### தூக்கு

தொல்காப்பியர் ‘தூக்கு’ என்பதை ஓசை எனும் பொருளில் கையாளுகின்றார். ஓசையில்லாமல் ஒரு பாட்டைப் புனைய முடியாது. (தொல். பொருள். செய்யுள். நூ.எ.391) அழைத்துக்கூறும் அகவலோசை ஆசிரியப்பாவிற்கும் செப்பலோசை வெண்பாவிற்கும் துள்ளலோசை கலிப்பாவிற்கும் தூங்கலோசை வஞ்சிப்பாவிற்கும் வகுத்துக் கூறப்படுகிறது. அகவல், செப்பல், துள்ளல். தூங்கல் என்ற நான்கு ஓசைகளைத் தவிர வேறு ஓசைகள் இல்லை என்கிறார். தொல்காப்பியர். தூக்கு என்பதைப் பாக்களைத் தணித்துக் கூறும் உறுப்பு என்று பேராசிரியரும் தூக்கு என்பது சீர்களால் ஆனது என்று அடியார்க்கு நல்லாரும் குறிப்பிடுகின்றனர். எனவே ஒரு பாட்டை அடையாளப்படுத்துவதற்கு ஓசையெனும் பொருளில் வரும் தூக்கு என்ற உறுப்பு மகவும் இன்றியமையாததாக அமைகிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

### தொடை

செய்யுளுக்கு ஓசை இன்பமும் பொருள் இன்பமும் பயக்கச் செய்யும் உறுப்பு தொடையாகும். தொரட என்ற சொல் ‘பூகட்டுதல்’ என்று பொருள்படும். ‘தொடு’ என்ற வினையடி யிலிருந்து தோன்றிய பொருள் தொழில் பெயர் ஆகும். செய்யுள் உறுப்புகளுள் தொடையை ஒரு உறுப்பாகக் கூறிய தொல்காப்பியர் தொடை க்கு விளக்கம் தராமல் அதன் வகைகளை மட்டும் குறிப்பிடுகின்றார். மோனை, எதுகை, முரண், இளைபு, அளபெடை, செந்தொடை, நிரனிறுத்தல், இரட்டை யாப்பு ஆகியவை தொடையின் வகைகளாகக் கூறப்பட்டுள்ளன.

மோனை- அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது

எதுகை- முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது

முரண்- சொல்லினாலாவது பொருளினாலாவது மாறுபடத் தொடுப்பது

இயைபு- அடியின் இறுதிச்தொல், சீர், எழுத்து ஒன்றி வருவது

அளபெடை- அடிதோறும் அளபெடை அமையத் தொடுப்பது.

இவ்வைந்தும் பாட்டின் அடிதோறுமும் வருவதற்குரிய தொடைகளாகும். இவற்றினுள் மோனைத் தொடைக்கும் எதுகைத் தொடைக்கும் ஒரே எழுத்து வருதலின்றி வருக்க எழுத்துகள் வந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொழிப்புத் தொடை- முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் எதுகை வருவது;

ஒரூஉத் தொடை- முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை முதலான தொடைகள் வருவது.

இவ்விரண்டும் ஓரடிக்குள் வருவது.

செந்தொடை- எவ்வகைத் தொடையும் இல்லாமல் இயல்பாகத் தொடுப்பது.

மேலே கூறிய தொடைகளையும் தொடை வகை களையும் விரிக்கும்போது அது பல மடங்காக விரியும். தொடையின் பாகுபாடு 13,699 என்று இளம்பூரணரும், 13,708 என்று பேராசிரியரும், 19,291 என்று நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள் ளனர். இதிலிருந்து எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது என்பதே தொடையின் பொதுப் பண்பாக அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**நோக்கு**

மாத்திரை, எழுத்து, அசை, சீர் முதலாக அடி நிரம்பும் கேட்டோர் மீணடும் நோக்கப் பயன் கொள்ளுதற்குரியதாகச் செய்யும் கருவியை நோக்கு என்கிறார் (தொல்.பொருள். செய்யுள். நூ.எ.409). நோக்குதல் என்ற சொல்லானது உட்பொருளோடு பார்த்தல், ஆராய்தல் திறனாய்தல் எனப் பல பொருள்களைத் தருகின்றன. இவ்வுறுப்புப் பற்றிய தொல்காப்பி யரின் நூற்பாவுக்கு உரையெழுதிய பேராசிரியர் "படைப்பாளியின் நோக்கு. வாசகர் நோக்கு, பாடலைப் பல்வேறு அலகுகளில் பிரித்துப் பார்ப்பது" கணேசையர், ப.ஆ., பேராசிரியர், உ.ஆ., தொல்காப்பியம், பொருளதிகாரம், ப.430. என்ற மூன்று கருத்துகளைக் கூறுகின்றார். நச்சினார்க்கினியர் நோக்குதலைப் பயன் கோடல் என்று கூறி வாசகர் நோக்கை மட்டும் கூறியுள்ளார். இளம்பூரணர் நோக்கு என்னும் உறுப்பு வாசகர் நோக்குந்திறன், படைப்பாளி யின் மனநிலை, பாடல்களை அடிக்கருத்து அடிப்படையில் நோக்குவது ஆகியவற்றைச் சார்ந்து அமையும் என்கிறார். இவ்விளக்கங் களின் அடிப்படையில் பார்க்கும்போது நோக்கு என்பது ஆழமாக, நுட்பமாக வாசித்து படைப்பாளியின் படைப்பு நோக்கத்தை அறியும் முயற்சியாகக் கொள்ளப்படுகிறது என்ற முடிவுக்கு வரலாம்.

**பா**

தூக்கு என்னும் அகவல் ஒசைகளைப் பெற்று வரும் அடிகளால் அமைந்த செய்யுள் பா எனப்படும். தொல்காப்பியர் ஆசிரியப்பா, வஞசிப்பா, வெண்பா, கலிப்பா (தொல்.பொருள். செய்யுள்.நூ.எ.410) என்னும் நான்கு வகையான பாக்களைக் குறிப்பிடுகிறார். இவ்வாறு நான்கு வகையாக விரிந்த பாவினது பகுதியை உண்மைத்தன்மை நோக்கியுரைப்பின் ஆசிரியப் பா, வெண்பா என இரண்டாய் அடங்கும். இவ்வாறு அடிவரையறையுடைய இலக்கிய வகையாகக் கருதப்படும் பாவானது அளம், பொருள், இன்பம் என்ற மூன்று பொருள்களை உணர்த்துவதாக இயற்றப்படும். ஒவ்வொரு பாவிற்கும் உரிய இலக்கணத்தையும் தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆவற்றைப் பின்வருமாறு காணலாம்.

**ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவானது இயற்சீரையும் ஆசிரியவுரிச் சீரையும் ஆசிரியத்தளையையும், அகவலோசை யையும் பெறற்றுசவரும். ஈற்றயலடி முச்சீரால் வரும். சிறுபான்மை பிற சீர்களும் கலந்து வரும். நேரிசையாசிரியப்பா இடையிடையே இரண்டு அல்லது முச்சீர்கள் கலந்து வரும் இணைக்குறளாசிரியப்பா, எல்லா அடியும் நான்கு சீர்களால் வரும் நிலைமண்டில ஆசிரியப்பா, ஏதேனும் ஓரடியை எங்கு மாற்றினாலும் ஓசையும் பொருளும் வரும் அடிமறிமண்டில ஆசிரியப்பா என் ஆசிரியப்பா நான்கு வகையாக வகைப்படுத்தப்படுகிறது. ஆசிரியப்பாவிற்குச் சிறுமை மூன்று அடியாகவும் பெருமை ஆயிரம் அடியாகவும் அமைகிறது.

**வஞ்சிப்பா**

வஞ்சிப்பாவானது வஞ்சியுரிச்சீராலும், ஏனைய சீர்களாலும், இருசீர், முச்சீர் அடிகளாலும் வந்து தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிவது ஆகும். இரு சீரடி வஞ்சிப்பா, முச்சீரடி வஞ்சிப்பா என இரண்டு வகைப்படும். இவற்றுள் ஆசிரியம், வெண்பா, கலியடிகள் மயங்கி வரும். தூங்கலோசை பெற்று வரும்

**வெண்பா**

வெண்சீரையும், இயற்சீரையும், வெண்டளையும், செப்பலோசையும் பெற்று அளவடியால் வருவது வெண்பா ஆகும். இதன் இறுதியடி மூன்று சீர்களைப் பெற்று வரும். நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுள் எனச் சொல்லப் படடவையும் அளவொத்தவையும் எல்லாம் வெண்பா யாப்பின என்பர் தொல்காப்பியர்.

**கலிப்பா**

துள்ளலோசை உடையதாய்த் தரவு, தாழிசை முதலிய உறுப்புகளைப் பெற்று நடப்பது கலிப்பா எனப்படும். ஒத்தாழிசைக் கலி, கலிவெண்பாட்டு, கொச்சகம், உறழ்கலி என நான்கு வகைப்படும். இவற்றுள் ஒத்தாழிசைக் கலியானது மேலும் இரண்டு வகைகளாக விரியும். இவற்றுள் முதல்வகை தாழிசை, தரவு, போக்கு. அடைநிலைக் கிளவி என்னும் நான்கு உறுப்பினையுடையதாக வரும். ஒத்தாழிசைக் கலியின் இரண்டாவது வகை தேவரைப் பராவும் பொருண்மையுடையது. தேவரைப் பரவுதலாகிய அது வண்ணகம் எனவும் ஒருபோகு எனவும் இரு வகைப்படும். இவற்றிலிருந்து சீர், அடி,

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ஓசையின் அடிப்படையில் பெயர்பெறும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கு வகைப் பாக்களினால் அடிவரையறை யுடைய செய்யுள் இயற்றப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

**அளவு**

தொல்காப்பியத்தில் அளவியல் என்பது செய்யுளுக்கு உரிய ஓர் உறுப்பாகவே எண்ணப் படுகிறது. பூக்களுக்கு இலக்கணம் கூறும் பகுதியில் அளவியல் இடையிடையே சொல்லப் பட்டது. அளவு என்பது ஒரு பாடலின் அடிவரை யறையைக் குறிப்பதாகவே பார்க்கப்படுகிறது. தொல்காப்பியர் ஆசிரியப்பாவின் சிற்றெல்லை மூன்றடி என்றும் பேரெல்லை ஆயிரம் அடி (தொல்.பொருள்.செய்யுள்.நூ.எ.459) என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வரையறை வஞ்சிப்பா விற்கும் பொருந்தும் என்று இளம்பூரணார் குறிப்பிடுகின்றார். வெண்பாவின் சிறுமை இரண்டு, பேரெல்லை பன்னிரண்டு எனக் கூறப்படுகிறது. வெண்பாவின் அடிவரையறை அங்கதப்பாட்டான வெண்பாவிற்கும் பொருந்தும் என்கிறார் தொல்காப்பியர். பரிபாடலுக்கு நானூறு அடி பேரெல்லையாகவும் இருபத்தைந்து அடி சிற்றெல்லையாகவும் கருதப்படுகிறது.. கலிப்பாவின் அடிவரையறையானது அதில் இடம் பெறும் தரவு, தாழிசை, தனிச்சொல் போன்ற உறுப்புகளைப் பொறுத்தே அமையும். இதிலிருந்து ‘அளவியல்’ என்பது செய்யுள் இயற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை அறியலாம்.

**திணை**

செய்யுள் உறுப்புகளுள் திணையினையும் தொல்காப்பியர் குறித்துள்ளார். திணை என்ற சொல்லானது ஒழுகலாறுகள், நிலம் போன்ற பொருள்களில் வழங்கப்படுகிறது. அகம், புறம் என்று இரு நிலைகளில் திணையானது பாகுபடுத்தப்படுகின்றது. கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை, பெருந்திணை ஆகிய ஏழும் அஅஅகத்திணைகளாகப் பிரிக்கப் பட்டன. கைக்கிளை, பெருந்திணை தவிர நடுவில் உள்ள ஐந்து திணைகளும் அன்பின் ஐந்திணைகள் எனப்பட்டன. அன்பின் ஐந்திணை களுக்கு முதல், கரு, உரிப்பொருட்கள் வரையறு க்கப்பட்டன. முதற்பொருள் என்பது குறிப்பிட்ட நிலமும், அந்நிலத்திற்குரிய குறிப்பிட்ட பொழுது மாகும். குறிஞ்சி நிலம் மலை சார்ந்த பகுதி யாகவும், முல்லை நிலம் காடு சார்ந்த பகுதி யாகவும், மருதம் நிலம் வயல் சார்ந்த பகுதி யாகவும், நெய்தல் நிலம் கடல் சார்ந்த பகுதி யாகவும் வரையறுக்கப்பட்டன. பாலைக்கு நிலம் சொல்லப்படவில்லை எனினும் கோடைக் காலத்தில் ஏற்படும் பருவகால மாற்றம் காரண மாக உண்டாகும் நிலம் பாலை எனப்பட்டது. இதேபோன்று ஐந்து நிலங்களுக்குரிய பொழுது களும் வரையறுக்கப்பட்டன. முல்லைக்குக் காரும், மாலையும், குறிஞ்சிக்குக் கூதிர், யாமம், பனி எதிர்பருவம் என்பனவும், நெய்தலுக்கு எற்பாடும், பாலைக்கு நண்பகலும், வேனில், பின்பனி என்பனவும் மருதத்துக்கு வைகறையும் விடியலும் பொழுதுகளாகக் கூறப்பட்டன. இவ் வாறு நிலங்களும், பொழுதுகளும் செய்யுளில் வெளிப்படையாக வருமிடத்துக் குறிப்பிட்ட திணைக்குரிய பாடல்களைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

**கருப்பொருள்**

முதற்பொருளிலிருந்து தோன்றுவது கருப்பொருள் ஆகும். அதாவது இடத்தையும் காலத்தையும் மையமாகக் கொண்டு கருப்பொருள் கணக்கிடப் படுகிறது. தேவர், மக்கள், விலங்கு முதலாயின வற்றையும் உணவு, செயல் முதலாயின வற்றையும் பறை, யாழ் முதலாயினவற்றையும் இவை போன்ற பிறவற்றையும் கருப்பொருளாகக் கொள்வர். ஒவ்வொரு காலநிலைக்கும் சூழ் நிலைக்கும் ஏற்ப அமைவது கருப்பொருளாகும் என்ற தெளிவினைப் பெற முடிகிறது.

**உரிப்பொருள்**

நடுவண் ஐந்திணைகளுக்குரிய உரிப்பொருட் களைப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்று ஐவகைப்படுத்தியுள்ளார் தொல் காப்பியர். அதாவது குறிஞ:சிக்குப் புணர்தலும் பாலைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும், முல்லைக்கு இருத்தலும் இருத்தல் நிமித்தமும், மருதத்துக்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும் உரிப்பொருளாக வகுக்கப்பட்டுள்ளன. இந்த உரிப்பொருட்கள் நிலத்துக்கு நிலம் மயங்கி வராது எனப்படுகின்றது. எனவே உரிப்பொருள் என்பது மக்களின் வாழ்வியல் நெறிகளோடு தொடர்புடையதாக அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

**புறத்திணைகள்**

புறத்திணைகளை ஏழாகத் தொல்காப்பியர் வகுத்துள்ளார். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பனவாம். இவற்றுள் முதலில் வரும் நான்கு திணைகளும் போர் முறை பற்றியன. வாகை என்பது வெற்றியைப் பொருண்மையாகக் கொண்டது. இது அறம், மறம் என இருவகையாகப் பிரிக்கப் படுகிறது. காஞ்சித் திணை நிலையாமையை உணர்த்தக் கூடியது. நிறைவாக உள்ள பாடாண்

திணை என்பது பாடப்படுவோரின் ஒழுகலாறு களைப் புகழ்ந்தும் வாழ்த்தியும் கூறுவதாகும். இவ்வேழு புறத்திணைகளும் ஏழு அகத்திணை களுக்குப் புறனாக அமையும் என்கிறார் தொல்காப்பியர். இவ்வாறாக தொல்காப்பியர் அகம், புறம் என்ற இரு செயல்பாடுகளையும் திணை என்ற ஒரு கூறினுள் அடக்கி அதனை ஒரு செய்யுளுறுப்பாக அமைத்திருப்பதை அறிய முடிகிறது.

**கைகோள்**

கைகோள் என்பது ஒழுக்கம் என்ற பொருளில் கையாளப்படுகிறது. களவு, கற்பு என்ற இருவகை ஒழுக்கங்கள் தொல்காப்பியத்தில் பயின்று வருகின்றன. களவு என்பதற்கு திருமண த்திற்கு முந்தைய காதல் வாழ்க்கை என்றும் கற்பு என்பது திருமணத்திற்கு பிந்தைய வாழ்க்கை என்றும் விளக்கப்படுகிறது. களவு நான்கு பகுதிகளைக் கொண்டது. அவை காமப்புணர்ச்சி, இடந்தலைப்படல், பாங்கொடு தழால், தோழியிற்புணர்வு என்பன. களவு என்பது கூடலை மட்டுமே மையமாகக் கொண்டு ள்ளது. பெற்றோர் இல்லாமல் தலைவனும் தலைவியும் உடன்போக்கு மேற்கொண்டு திருமணம் செய்து கொள்வது. அதுவும் கற்பென்றே கொள்ளப்படும். குலமகளிர்க்குரிய பெருங்குணமாகிய கற்பு, மனையறத்திற்கு அடிப்படையாதலால் வரைவொடு நிகழும் இல்லறவொழுக்கம் எனப்பட்டது. இது மலிபு (மகிழ்ச்சி), புலவி (ஊடல்), உணர்வு(தேற்றுதல்), பிரிவு ஆகிய நிகழ்வுகளைக் கொண்டது. இல்லற வாழ்வில் இணையும் தலைவன், தலைவியின் தனிப்பட்ட வாழ்க்கையில் நிகழும் வாழ்க்கையில் நிகழும் நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கற்பையும் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகக் கூறியுள்ளார் என்பது தெளிவாகிறது.

**தொகுப்புரை**

இக்கட்டுரையானது தொல்காப்பியயரின் பாவியல் குறித்த சிந்தனைகளை வெளிக்கொணர்வதாக அமைந்துள்ளது. பாவியல் கோட்பாடுகள் என்பது ஒரு செய்யுளை இயற்றுவதற்கான அடிப்படை யான இலக்கணங்களை உள்ளடக்கியது எனும் பொருளில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தொல்காப்பியரின் பாவியல் கோட்பாடுகள் தொல்காப்பியப் பொருளதிகதரத்தின் செய்யுளி யலில் இடம்பெற்றுள்ளது. செய்யுளுக்கு இன்றிய மையாது அமைக்கப்படும் 34 உறுப்புகளை அறிமுகப்படுத்தி, அவற்றிற்கான இலக்கணங் களையும் வகுத்துத் தந்துள்ளார். வடிவம், செய்கை, அமைப்பு, பொருள் என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ள உறுப்புகள் பா எனும் செய்யுளை உருவாக்குவதற்கான கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது எனலாம்.

**துணைநூற்பட்டியல்:**

1. செ.ஜீன்லாறன்ஸ்,கு.பகவதி,(ப.ஆ.), கார்த்தி கேசு சிவத்தம்பிதொல்காப்பிய இலக்கிய கோட்பாடுகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.-600113
2. கணேசையர், (ப.ஆ.), தொல்காப்பியம், பொருளதிகாரம் மூலமும் பேராசிரியருரையும் பாகம்- இரண்டு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.-600113.
3. கௌமாரீஸ்வரி,(ப.ஆ.), தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணளார் உரை, சாரதா பதிப்பகம், சென்னை- 600005.
4. நச்சினார்க்கினியர், உ.ஆ.), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை-600001.
5. பேராசிரியர், (உ.ஆ.), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை-600001.
6. அகத்தியலிங்கம், ச., தொல்காப்பிய உருவாக்கம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
7. அம்மன்கிளி முருகதாஸ், சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும், அண்ணாமமரைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
8. அருணாசல பிள்ளை, மு, தொல்காப்பிய அகத்திணையியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கனைக்கழகம், மதுரை
9. கந்தசாமி, சோ.ந., தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், சிதம்பரம்-608001.
10. கடிகாசலம்,ந. சுpவகாமி,ச.,(பதி.ஆ), தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமயி, சென்னை- 600013.
11. சிவத்தம்பி,கா., இலக்கியமும் கருத்து நிலையும், தமிழ்ப் புத்தகாநிலையம், சென்னை- 600005.
12. அகத்தியலிங்கம்,ச., பாலசுப்ரமணியன்,க., (பதி.ஆ.), சார்பெழுத்துக் கொள்கைகள், அண்ணமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.